## கரூர் மாநகராட்சி

**2024ம் ஆண்டு செப்டம்பர் 30ம்தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

### பொருள்கள்

**1)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சேலம் மெயின் ரோடு முதல் வாங்கப்பாளையம் பகவதியம்மன் கோவில் வரை மாநகராட்சியின் பகிர்மான குழாய் மற்றும் மெயின் குழாய் (160mm PVC) மற்றும் பகிர்மான குழாய்(110mm PVC) லையன் முழுவதும் மழை நீர் வடிகால் கட்டும் அடிப்பகுதியில் வருவதால் பி.வி.சி குழாய்கள் உடைந்து விடுவதாலும், மேற்படி பகிர்மானக்குழாய் மற்றும் மெயின் லையன் குழாய்கள் அமைக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், மாநகராட்சி பகுதியான வார்டு எண்.4,6,7,8 மற்றும் 9 பொதுமக்களுக்கு குடிநீர் சீராக வழங்க, 160mm பி.வி.சி மற்றும் 110 mm பிவிசி மெயின் லையன் மற்றும் பகிர்மானகுழாய்கள் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசியம் கருதி இப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட பணிக்கு ரூ.9,50,000/– மதிப்பீட்டில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | M/s.A.S.Power Solution, Trichy | 0.02% குறைவு |
| 2) | Vishwa Infrastructures, Kanniyakumari | 1.06% அதிகம் |
| 3) | Vairam Engineering & Consulting services, Madurai | 1.92% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் தேர்தல் நன்னடத்தை விதிகள்அமலில் இருந்ததாலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.A.S.Power Solution, Trichy அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ9,31,314/- மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/2497/2023)

**தீர்மான எண்.2031** பதிவு செய்யப்பட்டது

**2)** கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கரூர் கிராமத்தில் திருவாளர்கள் கே.சி.இந்திரமூர்த்தி மற்றும் சி.முருகேசன் ஆகியோர்களுக்கு சொந்தமான புல எண்.402/2, 402/3, 460/1A2–ல் 2.435 ஏக்கர் இடத்திற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது உபயோகம் இடத்தினை பத்திர பதிவு ஆவண எண்.2588/2024 வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.CLXZA8P5/2024TCP நாள்.12.07.2024ல் மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.105/2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்கிற மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின்

குறிப்பினை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம். **(3709/2024/எப்1)**

**தீர்மான எண்.2032** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**3)**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எல்.என்.எஸ் கிராமத்தில் திருவாளர்கள் கே.என்.பிரபு மற்றும் வி.பிரேமலதா ஆகியோர்களுக்கு சொந்தமான புல எண்.**241**/A1, A2, B1A1A, B1A1C, B1A2, 242/1B, 2 & **3**–ல் **2.00** ஏக்கர் இடத்திற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது உபயோகம் இடத்தினை பத்திர பதிவு ஆவண எண்.**951/2023** வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.ழதுனு**323**ழ**3/2022**/கூஊஞு நாள்.**24.02.2023**ல் மனைப்பிரிவிற்கு SWP/DTCP/KARUR/APPROVAL LAYOUT NO.87/2023 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்கிற மாநகராட்சி சயற்பொறியாளர் அவர்களின் குறிப்பினை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம். **(8791/2022/எப்1)**

**தீர்மான எண்.2033** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**4)** கரூர் மாநகராட்சி மண்டலம் – 1க்குட்ப்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளான. 1 முதல் 10 வரை மற்றும் 28 ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 25 நபர்களை வெளிக்கொணர்வு முகமை(Outsourcing) மூலம் 6 மாதத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் 2023-2024ம் ஆண்டு விலைவிகிதத்தின்படி 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ28.90 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 25.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.28.90 இலட்சம்</u>**

1. M/s The R.K. Company, Perambalur மதிப்பீட்டைவிட **0.05**%சதம் குறைவு
2. M/s.Saram Enviro Services,Pvt Ltd, Chennai மதிப்பீட்டைவிட **2.90**%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1930, நாள்.08.08.2024ம் தேதி ரூ.28.90 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்..
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s The R.K. Company, Perambalur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்காலம். (**எச்1/3791/2024)**

**தீர்மான எண்.2034** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**5)** கரூர்மாநகராட்சி மண்டலம் – 2க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளான 11,20,21,22,23,24,25, 26,27,29,30,31,32,33,34 மற்றும் 35ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 25 நபர்களை வெளிக்கொணர்வு முகமை(Outsourcing) மூலம் 6 மாதத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் 2023-2024ம் ஆண்டு விலைவிகிதத்தின்படி 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ28.90 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 25.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்த்தாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.28.90 இலட்சம்**</u>

1. M/s The R.K. Company, Perambalur மதிப்பீட்டைவிட **0.05**ரூசதம் குறைவு
2. M/s.Saram Enviro Services,Pvt Ltd, Chennai மதிப்பீட்டைவிட **2.90**ரூசதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1931, நாள்.08.08.2024ம் தேதி ரூ.28.90 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழுங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்..
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s The R.K. Company, Perambalur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்காலம். (**எச்1/3792/2024**)

**தீர்மான எண்.2035** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**6)** கரூர்மாநகராட்சி மண்டலம் – 3க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளான 12,13,14,15,16,17,18,19, 38,39,40,41 மற்றும் 42 ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 25 நபர்களை வெளிக்கொணர்வு முகமை(Outsourcing) மூலம் 6 மாதத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் 2023-2024ம் ஆண்டு விலைவிகிதத்தின்படி 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ28.90 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 25.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்த்தாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.28.90 இலட்சம்**</u>

1. M/s The R.K. Company, Perambalur மதிப்பீட்டைவிட **0.05**%சதம் குறைவு
2. M/s.Saram Enviro Services,Pvt Ltd, Chennai மதிப்பீட்டைவிட **2.90**%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. **மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1932, நாள்.08.08.2024ம் தேதி ரூ.28.90 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்..**
2. **மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** M/s The R.K. Company, Perambalur **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்காலம். (எச்1/3793/2024)**

**தீர்மான எண்.2036** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**7)**கரூர் மாநகராட்சி மண்டலம் – 4க்குட்ப்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளான.36,37,43,44,45,46, 47 மற்றும் 48 வரை டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 25 நபர்களை வெளிக்கொணர்வு முகமை(Outsourcing) மூலம் 6 மாதத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் 2023-2024ம் ஆண்டு விலைவிகிதத்தின்படி 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ28.90 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 25.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்த்தாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.28.90 இலட்சம்**

1. M/s The R.K. Company, Perambalur மதிப்பீட்டைவிட **0.05%** சதம் குறைவு
2. M/s.Saram Enviro Services,Pvt Ltd, Chennai மதிப்பீட்டைவிட **2.90%** சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. **மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1933, நாள்.08.08.2024ம் தேதி ரூ.28.90 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்..**
2. **மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** M/s The R.K. Company, Perambalur **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்காலம். (எச்1/3794/2024)**

**தீர்மான எண்.2037** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**8)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், புல எண்கள்.**263, 264,265/1–**ல் இலங்கை அகதிகள் முகாம் அமைப்பது தொடர்பாக வாதி திரு.பி.குமரேசன் என்பவர், சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.**15259/2022–**ல் **1**வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, **2**வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர், போக்குவரத்து துறை, **3**வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர் / ஆணையாளர், அகதிகள் முகாம், **4**வது பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, **5**வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர். **6**வது பிரதிவாதியாக மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் கும்பகோணம், 7வது பிரதிவாதியாக

ஆணையாளர், கரூர் மாநகராட்சி மற்றும் 8வது பிரதிவாதியாக வட்டார வளர்ச்சி அலுவலர், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் ஆகியோர்களை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்காக அரசு சார்பாகவும் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் கூடுதல் அரசு வழக்கறிஞர் மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் ஆகியோர் இணைந்து வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் மற்றும் இதர செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் தீர்மானம் எண்.420, நாள்.18.08.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் தொடர்ச்சியாக மாநகராட்சி வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணி அவர்களால் தெரிவித்துள்ளபடி இவ்வழக்கின் முக்கியத்துவத்தினை கருதி, கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் திரு.வீர கதிரவன் அவர்கள் மூலம் வழக்கு நடத்தியதற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(4823/2022/எப்1)**

**தீர்மான எண்.2038** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், புல எண்கள்.263, 264, 265/1–ல் புதிய பேருந்துநிலையம் அமைப்பது தொடர்பாக வாதி திரு.C.சரவணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்கு எண்.WP(MD).No.20509/2022–ல் 1வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள், 2வது பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள், 3வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர், மற்றும் 4வது பிரதிவாதியாக ஆணையாளர், கரூர் மாநகராட்சி ஆகியோர்களை சேர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்காக அரசு சார்பாகவும் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் கூடுதல் அரசு மூத்த வழக்கறிஞர் மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் ஆகியோர் இணைந்து வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் மற்றும் இதர செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் தீர்மான எண்.664, நாள்.20.12.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மாநகராட்சி வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணி அவர்களால் தெரிவித்துள்ளபடி பேருந்து நிலைய வழக்கின் முக்கியத்துவத்தினை கருதி மூத்த வழக்கறிஞர் திரு.வி.பி.செங்கோட்டுவேல் அவர்கள் மூலம் வழக்கு நடத்தியதற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

மாமன்றம் அனுமதிக்கலாம். **( 5738/2022/எப்1)**

**தீர்மான எண்.2039** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**10)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், புல எண்கள்.263, 264, 265/1–ல் கூடுதல் பேருந்துநிலையம் அமைப்பது தொடர்பாக வாதி திரு.R.பெரியசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்கு எண்.WP(MD).No.3242/2021–ல் 1வது பிரதிவாதியாக அரசு செயலாளர், போக்குவரத்துத்துறை சென்னை, 2வது பிரதிவாதியாக அரசு செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 3வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள், 4வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் 5வது பிரதிவாதியாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், கும்பகோணம், 6வது பிரதிவாதியாக ஆணையாளர், கரூர் நகராட்சி மற்றும் 7வது பிரதிவாதியாக உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, கரூர் ஆகியோர்களை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணி அவர்களால் தெரிவித்துள்ளபடி பேருந்து நிலைய

வழக்கின் முக்கியத்துவத்தினை கருதி கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் திரு.வீர கதிரவன் அவர்கள் மூலம் வழக்கு நடத்தியதற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(6203/2020/எப்1)**

**தீர்மான எண்.2040** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், புல எண்கள்.**263, 264, 265/1**–ல் புதிய பேருந்துநிலையம் அமைப்பது தொடர்பாக வாதி திரு.M.R.K.சிவா என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்கு எண்.WP(MD).No.18160/2020–ல் **1**வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள், **2**வது பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள், **3**வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் மற்றும் **4**வது பிரதிவாதியாக ஆணையாளர், கரூர் நகராட்சி ஆகியோர்களை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்காக அரசு சார்பாகவும் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் ஆகியோர் இணைந்து வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் மற்றும் இதர செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் தீர்மான எண்.**792**, நாள்.**31.01.2023**ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் தொடர்ச்சியாக மாநகராட்சி வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணி அவர்களால் தெரிவித்துள்ளபடி பேருந்து நிலைய வழக்கின் முக்கியத்துவத்தினை கருதி கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் திரு.வீர கதிரவன் அவர்கள் மூலம் வழக்கு நடத்தியதற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(6582/2020/எப்1)**

**தீர்மான எண்.2041** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**12)**கரூர் மாநகராட்சியில் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிர்வாக அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது **2023–2024**ம் ஆண்டிற்கு நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் பதிவு செய்யலாம் (சி3/3395/2022)

**தீர்மான எண்.2042** பதிவு செய்யப்பட்டது

**13)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.**16133/2023**/யுபிஏ, நாள்.**14.07.2023**ல் தெரிவித்துள்ளதற்கிணங்க கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **1** வார்டு எண்.**1** முதல் **11** வரை மற்றும் **28** வார்டு பகுதிகளில் கலைஞர் உரிமைத்திட்டம் மூலமாக விண்ணப்பங்கள் பெறுவதற்கு இம்மாநகராட்சிக்குட்பட்ட **75** நியாய விலைக்கடைகளில் இரண்டு கட்டமாக கணக்கெடுப்புக்கள் முகாம்கள் நடத்தப்பட வேண்டியுள்ளது. மண்டலம் **1**க்குட்பட்ட **6** வார்டு பகுதிகளில் முதல் கட்டமாக **6** முகாம்கள் – **15** நாட்களுக்கும் மற்றும் இரண்டாம் கட்டமாக **3** முகாம்கள் –**10** நாட்களில் கலைஞர் உரிமைத் திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் முகாம்களுக்கு பொதுமக்கள் அமர (GI Sheet) நிழற்கூடங்கள், ஒரு முகாமிற்கு **100** நாற்காலிகள், குடிநீர் வசதி , கழிப்பிட வசதி, மின் விசிறிகள், கீழ் மேட், கணிணிக்கு பிளாக் பயிண்ட், மைக் செட், மற்றும் ஸ்பீக்கர் பாக்ஸ் வசதிகள் செய்யும் பணியினை உடன் மேற்கொள்ள

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **2022** பிரிவு **57(7)** ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Magil Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. **16.70** இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1 | M/s.Magil Construction, Karur | **0.07**% Less |
| 2 | Thiru.K.Ramesh, Karur | **1.81**% above |
| 3 | Thiru.G.Nanthakumar, Karur | **2.72**% above |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **2022** பிரிவு **57(7)** ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Magil Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. **16,58,106/-**ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **( இ1/6259/2023)**

**தீர்மான எண்.2043** பதிவு செய்யப்பட்டது

**14)** அரசாணை நிலை எண்(எம்.எஸ்).27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.7), நாள்.22.02.2022ல் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022–2023 மற்றும் 2023 –2024ம் ஆண்டின் கீழ் ரூ.**1300.00** இலட்சம் மதிப்பீட்டில் இம்மாநகராட்சிக்குட்பட்ட மோகனூர் – வாங்கல் சாலை முதல் காமதேனு நகர் வழியாக புகளூர் நெடுஞ்சாலை வரை இணைக்கும் இணைப்பு சாலை (Link Road) அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி பங்களிப்பு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | அரசாணை விபரம் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மொாத்த மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | திட்ட நிதி (ரூ லட்சத்தில்) | மத்திய அரசு நிதி(ரூ.லட்சத்தில்) | மாநில அரசு நிதி(ரூ லட்சத்தில்)ல்) | மாநகராட்சி பங்களிப்பு நிதி (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27/22.02.23 | I & A 2022-2023 | புகளூர் சாலை முதல் வாங்கல் சாலை வரை இணைக்கும் இணைப்பு சாலை | **1300.00** | I & A 2022-2023 Rs.400.00 & 2023-2024- Rs. 600.00 | – | – | **300.00** |
| | **Total** | | | **1300.00** | **1000.00** | | | **300.00** |

அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**001/2022**/டிஓ**1**, நாள்.**06.03.2023**ல் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றது.

மேற்படி இணைப்பு சாலை மோகனூர், நாமக்கல் சேலத்திலிருந்து கரூர் வழியாக ஈரோடு திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் செல்லும் வாகனங்கள் கரூர் நகரத்திற்குள் செல்லாமல் தற்போது

அமைக்கப்பட்டுள்ள இணைப்பு சாலை வழியாக ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள அண்ணா சாலை வழியாக தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்வதற்கு வாகன நெரிசல் தவிர்க்க ஏதுவாக உள்ளது.

மேலும் வாங்கல், பஞ்சாமாதேவி நெரூர், காட்டுப்புத்தூர், நாமக்கலிருந்து கரூர் செல்லும் வாகனங்கள் ஐந்து ரோடு வழியாக கரூர் நகரத்திற்கு செல்வது மிகவும் கூட்ட நெரிசலாகவும், காலதாமதம் ஏற்படுகிறது. எனவே புதிதாக அமைக்கப்பட்ட இணைப்பு சாலை வழியாக கரூர் நகரம் பேருந்து நிலையம், ரயில் நிலையம் செல்வதற்கு ஏதுவாகவும், குறுகிய நேரத்திற்குள் செல்வதற்கு ஏதுவாக உள்ளது. மேலும் கரூர் நகரிலிருந்து வெங்கமேடு வழியாக வாங்கல் , நாமக்கல், சேலம் செல்வதற்கு போக்குவரத்து நெரிசல் மற்றும் காலதாமதம் ஏற்படுவதற்கு மாற்று பாதையாக இணைப்பு சாலை பயன்படுகிறது.

மாமன்ற தீர்மானம் எண்.1929, நாள். 08.08.2024ல் கரூர் மாநகராட்சி பகுதியில் இயங்கி வரும் ஜவுளி ஏற்றுமதி தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் இரவு நேரங்களில் எந்த அச்சமும் இன்றி சாலையினை பயன்படுத்துவதற்கும் மற்றும் நாமக்கல், வாங்கல், நெரூர் ஆகிய பகுதிகளிலிருந்து வரும் பொதுமக்கள் கரூர் டவுனுக்குள் நுழைய இந்த சாலையை உபயோகப்படுத்துவதற்கு ஏதுவாக தெருவிளக்கு வசதி செய்வதற்கு மாநகராட்சி பொதுநிதியிலோ அல்லது அரசின் மானியம் மூலமாக பணியினை மேற்கொள்வதற்கு மண்டலம் –1 தலைவர் அவர்கள் முன்மொழிந்து 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இணைப்பு சாலையினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அப்பகுதியில் தெருவிளக்கு வசதி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.40.00 இலட்சத்தினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் அல்லது இம்மாநகராட்சியில் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்த இம்மாநகராட்சியில் இதுநாள்வரை பெறப்பட்ட அபிவிருத்தி கட்டணத்திலிருந்து செலுத்திட இவ்வலுவலக கடித ந.க.எண்.இ1/2720/2022 –ன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. உரிய அனுமதி வரும் பட்சத்தில் இதுநாள்வரை பெறப்பட்ட அபிவிருத்தி கட்டணத்திலிருந்து மேற்படி பணிக்கான தொகையினை செலுத்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2720/2023)**

**தீர்மான எண்.2044** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**15)** திருமதி.இந்திராணி பரமசிவம், 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

வஞ்சியம்மன் கோவில் தெரு ஆழ்குழாய் குடிநீர் (1) மற்றும் அண்ணாச்சி சந்து ஆழ்குழாய் குடிநீர் (1) இந்த இரண்டு ஆழ்குழாய் குடிநீர் நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. இந்த இரண்டு இணைப்புகளுக்கு பதிலாக மூர்த்தி மளிகை கடை அருகில் உள்ள ஆழ்குழாய் குடிநீர் குழாய் பராமரிப்பு வேலைகள் செய்து புதிதாக டேங்க் ஒன்று அமைத்து கொடுக்கவும் மற்றும் லிட்டில் ஏஞ்சல் பள்ளி அருகில் ஒரு டேங்க் அமைத்து தரவும்.

வளையல்கார தெருவில் உள்ள உப்பு நீர் பல நாட்களாக பைப் லைன் மற்றும் டேங்க் தண்ணீர் லீக் உள்ளதால் பைப் லைன் சரி செய்தும் மற்றும் புதிதாக வாட்டர் டேங்க் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2045** திருமதி.இந்திராணி பரமசிவம், 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ரா.தெய்வாணை 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**16)** திரு.A.தியாகராஜன் 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

15வது வார்டுக்குட்ப்பட்ட நரிகட்டியூர் பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தால் ஊர் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று 11.03.2024ல் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட தீர்மானம் எண்.1820–ஐ ரத்து செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

.

**தீர்மான எண்.2046** திரு.A.தியாகராஜன் 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

17) திருமதி.பிரேமாசங்கர் 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

22வது வார்டு ரத்தினம் சாலை மற்றும் நீலிமேடு தெரு இன்னும் சிறுபாலம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. ஆகவே (டிரைன் பின்புறம்) மின் இணைப்பு கம்பம் உள்ளது. இதை அகற்றி அருகில் அமைத்து தரவும். மேலும் பெண்கள் கழிப்பிடம் ஒன்று அமைத்து தரவும் இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2047** திருமதி.பிரேமாசங்கர் 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

18) திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.
1. 12 வது வார்டுக்குட்ப்பட்ட ஆண்டாள் நகர் 1வது கிராஸில் ஆழ்துளை குழாய் பம்பு உள்ளது. அதில் மின் மோட்டார் வைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தரவும்.
2. 12 வது வார்டுக்குட்ப்பட்ட ஆண்டாள் நகர் 3வது கிராஸில் ஒரு சிறிய சாக்கடைக்கு 15அடி நீளம் 3 அடி அகலம் ஒரு சிறிய பாலம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2048** திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19) திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.
12 வது வார்டுக்குட்ப்பட்ட பசுபதிபாளையம் நடுத்தெரு நுழைவு வாயிலில் பள்ளமாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீரும் சாக்கடை கழிவு நீரும் முழங்கால் அளவுக்கு தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு சேறும் சகதியுமாக உள்ளது இதனால் பொது மக்கள் நடக்கமுடியாமல் சிரமம் ஏற்படுகிறது ஆகவே மேற்கண்ட தெருவில் நுழைவாயில், சாக்கடை கழிவு நீர் சிறுபாலம் அமைத்து தார்சாலை உயரப்படுத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2049** திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மாநகராட்சி மேயர்

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி